மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆனி 29 ஞாயிற்றுக்கிழமை (13-07-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 221

# கொரிய மாலுமிகள் 37 பேரும் விடுதலை!

## செஞ்.குழுவிடம் ஒப்படைப்பு

கொழும்பு, ஜூலை 13

'மொறாங் பொங்' சரக்குக் கப்பலின் 37 மாலுமிகளும் விடுதலைப் புலிகளால் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை மல்லாவியில் வைத்து இவர்கள் புலிகளால் ஒப்படைக்கப்பட்டனர் என செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பேச்சாளர் கூறினார். விடுவிக்கப்பட்ட மாலுமிகள் நேற்றிரவு கொழும்புக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு இவர்களை வடகொரிய கப்பல் கம்பனியின் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கும்.

கடந்த திங்கட்கிழமை 'மொறாங் பொங்' என்ற இந்தக் கப்பலைப் புலிகள் 38 மாலுமிகளுடன் கடத்தியதும் —

அன்றைய தினம் கப்பலின் நான்காவது அதிகாரி சுட்டுக் கொல்லப்பட்டதும் —

பின்னர் அவரது சடலம் புதன்கிழமை அன்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டதும் தெரிந்தவையே. (இ-5)

# மாலுமிகளுக்கு புலிகள் விருந்து!

மணிலா, ஜூலை 13

வடகொரிய மாலுமிகள் 37 பேரையும் விடுதலைப் புலிகள் விடுவிக்க முன்னர் அவர்களுக்கு தமிழ் மரபுப்படி விருந்து வைத்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் முகாம் ஒன்றில் இரண்டு மணி நேரம் இந்த விருந்து வைபவம் நீடித்தது என்றும்—

விருந்து வைபவத்தில் இடம்பெற்ற விடுதலைப் புலிகளின் இசை நிகழ்ச்சியின் போது வடகொரிய மாலுமிகளும் சேர்ந்து பாடினார்கள் என்றும்— வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது. (இ-5)

# மோதலை அடுத்து படையினரால் கந்தரோடைப் பகுதி சுற்றிவளைப்பு

## சடலம் ஆஸ்பத்திரியில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

சுன்னாகம், கந்தரோடைப் பகுதியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் மோதல் ஒன்று இடம் பெற்றதாகத் தெரியவருகிறது.

இச்சம்பவத்தின் போது ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# தங்கத்துரை கொலையை விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு வேண்டும்

## ஜனாதிபதியிடம் கோரிக்கை

திருமலை, ஜூலை 13

''திருமலை எம். பி. தங்கத்துரை உட்பட 6 பேரின் படுகொலைச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும்.''

தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருமலை மாவட்டக் கிளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதி

(8 ஆம் பக்கம் பார்க்க)

# இருவர் அடையாளம் காணப்பட்டனர்!

கொழும்பு, ஜூலை 13

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அ. தங்கத்துரை கொலை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டுள்ள மூன்று சந்தேக நபர்களில் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தங்கத்துரையின் மெய்ப்பாதுகாவலராகக் கடமையாற்றிய இரு பொலீஸாராலேயே இவர்கள் அடையாளம் காணப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும் நிலையில் கடற்படையினர் இல்லை

## பி. பி. ஸிக்கு 'திவயின' செய்தியாளர் பேட்டி

லண்டன், ஜூலை 13

''வடபகுதிக்கு வரும் உணவுக் கப்பல்கள் மற்றும் பயணிகள் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும் நிலையில் தற்போது கடற்படையினர் இல்லை. அதற்கான வளங்களும் அவர்களுக்குக் கிடையாது''

'திவயின' பத்திரிகையின் பாதுகாப்புத்துறைச் செய்தியாளர் சிறிமேவன் கஸ்தூரி ஆராச்சி பி. பி. ஸியின் சிங்களச் சேவைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:-

ஜூலை மாதம் 1ஆம் திகதி பேசாலைக் கடற்பரப்பில் 'மிசென்' என்னும் இந்தோனேஷியக் கப்பல் மீதும் 7 ஆம் திகதி வடகொரியக் கப்பலான 'மொறங் பொங்' கப்பல் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இக்காரணத்தினால் வடக்கிற்கான பொருள் விநியோகமும் பயணிகளை ஏற்றிச்செல்லும் பணியும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

இக்கப்பல்களுக்கு கடற்படையினரால் பாதுகாப்பு வழங்க முடியாமல் இருப்பதே இதற்குக் காரணம் ஆகும்.

கடற்படையினருக்கு கடற் பாதுகாப்பு போன்ற வேறு பணிகள் இருப்பதாகவும், கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கக்கூடிய வசதிகள் கடற்படையினரிடம் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகப் பணிமனையும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு கப்பல்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டுமென கடற்படை தெரிவிக்கிறது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ. நா. தூதரகத்துடன் அரசு பேச்சு நடத்துகிறது

யாழ்ப்பாணம் செல்வதற்காகப் பதிவு செய்து விட்டு சுமார் 16 ஆயிரம் அகதிகள் காத்திருப்பதாகவும் இவர்களை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் செல்ல அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்துடன் அரசு பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் அரசதரப்புச் செய்திகள் நேற்றுத் தெரிவித்தன.

அவசியம் ஏற்படின் இந்த அகதிகளை யாழ்ப்பாணம் அனுப்பி வைக்க சர்வதேச உதவி கோரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## முச்சந்திமுரளி



அப்ப கப்பல் வெளிக்கிட்டால் தான் பொருள்களும் வெளியில் வரும் போல......!

# பொருள்களுக்கு இங்கு தட்டுப்பாடு கிடையாது

## இராணுவ வட்டாரங்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

குடாநாட்டில் பொருள்களுக்குத் தட்டுப்பாடு கிடையாது என்று யாழ். குடாநாட்டின் பாதுகாப்புத் தலைமையகத்தின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பி. ஏ. கருணதிலக தெரிவித்துள்ளார்.

''யாழ். குடாநாட்டு மக்களுக்கு'' என்ற தலைப்பில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# ஆறு மாதங்களுக்குப் போதுமான பொருள்கள் கையிருப்பில் உண்டு

யாழ்ப்பாணம், ஜூலை 13

தற்போது யாழ். குடாநாட்டில் 6 மாதங்களுக்குப் போதுமான பொருள்கள் கையிருப்பில் இருப்பதாக நேற்று இடம்பெற்ற யாழ்ப்பாணம் நுகர்வோர் பாதுகாப்புச் சங்கத்துக்கும் யாழ்ப்பாணம் வர்த்தகர் சங்கத்துக்கும் இடை

(8 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டுநகரில் ராணுவ நடவடிக்கை!

கொழும்பு, ஜூலை 13

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளில் இராணுவத்தினரும் பொலீஸாரும், அதிரடிப்படையினரும் கூட்டாக நேற்று இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர்.

ஒந்தாச்சிமடம், கல்லாறு, கோட்டைக்கல்லாறு ஆகிய பகுதிகளில் இந்தக் கூட்டு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

கடந்த சில வாரங்களாக குறித்த நேரத்தில் வெடிக்கக் கூடிய குண்டுத் தாக்குதல்கள் பல இடம்பெற்றுள்ளதாலும்—

இது போலவே விடுதலைப் புலிகள் வேறு பல உபாயங்களைக் கடைப்பிடித்து வருவதாலும்— இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

இந்த இராணுவ நடவடிக்கையின் போது 200-க்கும் மேற்பட்டவர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும் இவர்களில் பலர் பின்னர் திருப்பி அனுப்பப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

# ரெஜிபெரேரா விஜயம்

சுகாதாரசேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் றெஜிபெரேரா நேற்று யாழ். போதனாவைத்தியசாலைக்கு விஜயம் செய்தார்.

வைத்தியசாலையின் பெரும்பாலான பகுதிகளைப் பார்வையிட்ட பணிப்பாளர் நாயகம், அங்குள்ள குறைபாடுகள் பற்றி நிர்வாகத்திடம் கேட்டுத் தெரிந்துகொண்டார். (இ-15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீர்வுக்கு ஒத்துழைப்பு வழங்காத அமைச்சர்கள் வீட்டுக்கு செல்லலாம்!

## ஜனாதிபதி எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 13

'அரசியல் தீர்வு உள்ளடக்கப்பட்ட புதிய அரசமைப்புத் தொடர்பாக பொது மக்களுக்கு விளக்கமளிக்கும் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டும். இதற்கு ஒத்துழைப்பு வழங்க விரும்பாதவர்கள் பதவிகளைத் துறந்து வீட்டுக்குச் செல்லலாம்'

இவ்வாறு கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற அவசர அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி எச்சரித்துள்ளார்.

முன் அறிவித்தல் ஏதுமில்லாது கடந்த 7 ஆம் திகதி காலை அமைச்சர்கள்தொலைபேசி மூலம் அழைக்கப்பட்டு இந்த அவசரக் கூட்டம் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து அமைச்சர்களான ஜி. எல். பீரிஸ், மங்கள முனசிங்கா, இந்திக குணவர்த்தன, அமரசிறி தொடங்கொட ஆகிய அமைச்சர்கள் மாத்திரமே பொதுமக்களுக்கு விளக்கம் அளித்து வருகின்றனர் என்றும்—

ஆனால் அமைச்சர் ரத்ன சிறி விக்கிரமநாயக்கா அரசியல் தீர்வுத் திட்டத்துக்கு எதிர்ப்பை வெளியிட்டிருந்தார் என்றும் 'ராவய' தெரிவித்தது. (இ-10)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி கைலாயபிள்ளை

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் சரவணையை வசிப்பிடமாகவும் தற்போது வவுனியாவில் வசித்து வந்தவருமான சின்னத்தம்பி கைலாயபிள்ளை 11-07-97 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை நாகம்மாவின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் (தவம்) அன்புக் கணவரும், ஸ்ரீஸ்கந்தராஜா (பிரான்ஸ்), ஸ்ரீசுகிர்தராஜா (பிரான்ஸ்), வரதலக்ஷ்மி (ஆசிரியை, யா/வேம்படிமகளிர்கல்லூரி), பங்கையற்செல்வி, தெய்வேந்திரராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிருபாகரன் (வவுனியா), தற்பராதேவி ஆகியோரின் மாமனாரும், பரணிதா, பரணிதன், விதுரன், டிலக்ஷ் ஆகியோரின் பேரனும், இராசமணி, பூமணி, கோபாலகிருஷ்ணன், புஸ்பவேணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், வேலுப்பிள்ளை, பத்மநாதன், இரத்தினாம்பிகை, சதாசிவம், கமலாசனி ஆகியோரின் மைத்துனரும், சிவநேசனின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வவுனியாவில் 12-07-97 இல் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கை. வரதலக்ஷ்மி

186/14, பருத்தித்துறை வீதி,
குருநாத சுவாமி கோயில் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (43381)

### வைரமுத்து இரத்தினம்

(ஓய்வு பெற்ற அரச கணக்காய்வாளர்)
(பன்னாலை, தெல்லிப்பழை)

பன்னாலையைப் பிறப்பிடமாகவும்இங்கிலாந்தை வதிவிடமாகவும் கொண்ட வைரமுத்து இரத்தினம் அவர்கள் 09-07-97 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சயம்புநாதர் வைரமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் செல்வநாயகியின் அன்புக்கணவரும் முருகையா, காலஞ்சென்ற திருமதி இராசம்மா பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச்சகோதரனும், இங்கிலாந்தைவதிவிடமாகக் கொண்டவர்களான பத்மநாதன்,இராமநாதன், லோகநாதன் ஆகியோரின் அன்புத்தந்தையும் வாசுகி, விஜயலட்சுமி, தனலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 13-07-97 ஞாயிற்றுக்கிழமை இங்கிலாந்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
திரு. சி. துரைசிங்கம்
(மைத்துனர்)

Mrs. R. Selvanayaki,
3 the Orchard,
wickford,
Essex ss 12 ohb,
England. (48380)

### அம்பர் வைரமுத்து

ஊரெழு மேற்கைச் சேர்ந்த அம்பர் வைரமுத்து 12-07-1997 அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும்' தர்மகுலநாதன் (வெள்ளை, றோயல் விளையாட்டுக் கழகம்), ரவீந்திரன் (ஜேர்மனி), குகேந்திரன் (கொழும்பு), பாஸ்கரன் (இந்தியா), சதீஸ்வரன் (இந்தியா), யோகேஸ்வரன் (இந்தியா), தயாளினி (இந்தியா), சுதர்சினி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கிருஷ்ணன், தவமணி ஆகியோரின் மைத்துனரும் சயந்தன், கஜந்தன், கஜகோபன், துஷ்யந்தன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13 - 07 - 1997 இன்று இந்தியாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தர்மகுலநாதன்
(வெள்ளை மகன்)

ஊரெழு- மேற்கு,
சுன்னாகம். (48374)

## மற்றொரு புதைகுழி கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூலை 13

தென்பகுதில் பயங்கரவாதம் நிலவியபோது எரிக்கப்பட்ட சடலங்களை இடுவதற்கு களனியைச் சேர்ந்த வானவாசலவில் இரு புதை குழிகள் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படுகிறது.

இது பற்றி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பல எலும்புத் துண்டுகள் கடந்த வாரம்மீட்கப்பட்டன.

எனினும் உதவி சட்ட மருத்துவ உத்தியோகத்தர் அஜித் தென்னக்கோன் கருத்து வெளியிடுகையில் தகுந்த பரிசோதனைகள் இன்றி அவை மனித எலும்புகளா என்ற முடிவுக்கு வருவது கடினம் என்று கூறினார்.

பேலியகொட மக்கள் கொடுத்த தகவலின் பேரில் கொழும்பு மேலதிக நீதிவான் விசாரணை நடத்தினார்.

## 102 குடும்பங்களுக்கு உதவி

ஊர்காவற்றுறை, ஜூலை 13

ஊர்காவற்றுறை நெருஞ்சிமுனையில் மீளக் குடியமர்ந்த 102 குடும்பங்களுக்கு ஈ. பி. டி. பி. அமைப்பின் நிதியிலிருந்து அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

இப் பொருள்களை ஈ. பி. டி. பி. யின் தீவக அரசியல் அமைப்பாளர் என். மனோகரன் இன்று வழங்குவார். (இ-10)

## அண்ணா சனசமூக நிலைய திறப்பு விழா

ஊர்காவற்றுறை, ஜூலை 13

ஊர்காவற்றுறை அண்ணா சனசமூக நிலையத் திறப்பு விழா இன்று நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையத்தை ஈ. பி. டி. பி. அமைப்பின் தீவக அரசியல் பொறுப்பாளர் என். மனோகரன் திறந்து வைப்பார்.

இதனையொட்டி விளையாட்டுப் போட்டிகள் அண்ணா சனசமூக நிலையத் தலைவரின் தலைமையில் நேற்று நடைபெற்றன.

விளையாட்டுப்போட்டியின் ஆரம்பத்தில்கழகக்கொடியை ஈ. பி. டி. பியின் தீவக அரசியல் அமைப்பாளர் என். மனோகரன் ஏற்றி வைக்க உதவி அரசியல் அமைப்பாளர் என். லோகன் மங்கள விளக்கு ஏற்றிவைத்தார். (இ-10)


எமது புதிய வெளியீடு!
செல்வா - சுவாதி
நடித்த
நாட்டுப்புற நாயகன்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(48379)


## இன்று முதல் 4 நாள்கள் வீரமக்கள் தினம்

### 'புளொட்' அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) ஆண்டுதோறும் அனுஷ்டித்துவரும் வீரமக்கள்தினம் இன்று ஞாயிறு முதல் நான்கு நாள்களுக்கு நடைபெறவுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கம், முன்னாள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வெ. யோகேஸ்வரன் ஆகியோரின் எட்டாவது நினைவு நாளான இன்று ஆரம்பமாகும் வீரமக்கள்தினம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் செயலதிபரான க. உமாமகேஸ்வரனின் எட்டாவது நினைவு நாளான எதிர்வரும் 16 ஆம் திகதி வரை நடைபெறும்.

வீரமக்கள்தின ஆரம்ப நாளான இன்று கழக உறுப்பினர்களால் யாழ் போதனா வைத்தியசாலையில் இரத்த தானம் வழங்கப்படும்.

14 ஆம் திகதி பருத்தித்துறை பஸ் நிலையத்தில் பொதுமக்கள் பாவனைக்கான பஸ் தரிப்பிடம் புதிதாக அமைக்கப்பட்டு பொதுக் கூட்டமும் நடைபெறும்.

15 ஆம் திகதி சாவகச்சேரி வைத்தியசாலையில் பொது மக்கள் பாவனைக்கான தண்ணீர் தாங்கி அமைக்கப்படும். பொதுக் கூட்டமும் நடைபெறும்.

இறுதி நாளான 16 ஆம் திகதியன்று யாழ். மத்திய பஸ் நிலையத்தில் பொதுமக்கள் பாவனைக்காக புளொட் அமைப்பினால் அமைக்கப்பட்ட பஸ்தரிப்பிடம் திறந்து வைக்கப்படும்.

கைலாசபிள்ளையார் கோவில் முன்றலில் பிற்பகல் 3 மணிக்கு பொதுக் கூட்டம் நடைபெறும். (இ-ஐ-5-15)

## தொழிற்சங்க அமைப்புகள் சுதந்திரமாகச் செயற்பட வேண்டும்

### பொதுக்கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம்ஜூலை 13

வெகுஜன, தொழிற்சங்க அமைப்புகள் தனித்துவமாகவும், சுயாதீனமாகவும்இயங்க வேண்டும். இன்றைய காலகட்டத்தில் இவற்றின் செயற்பாடு அவசியமானதாகும்.

'புளொட்' அமைப்பின் பிரசாரப் பொறுப்பாளர் செ. கிருபைராஜாமுன்கண்டவாறு தெரிவித்தார்.

சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தின் பொதுக் கூட்டம் கடந்த செவ்வாயன்று நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிகை அலங்கரிப்புத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பட்ட பிரச்சினைகள் குறித்து இக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இடப்பெயர்வுகளினால் செயலற்றுப் போன சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தை மறுசீரமைக்கும் நோக்கில் புதிய நிர்வாகசபை ஒன்றும் இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டது.

புதிய நிர்வாக சபையின் தலைவராக ஆ. அல்பேட்டும், உபதலைவராக கே. ரட்ணராஜாவும், செயலாளராக கே. ஸ்ரீ ராஜனும் உபசெயலாளராக யா. விக்ரரும், பொருளாளராக என். மனோகரனும் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ)

## 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



### திருமதி மரியம்மா எட்வேட் பிறின்ஸ்

எங்களுயிர்த் தாயாரே அம்மா என்றே
இனியாரை அழைப்போம் நாம் அன்பின் தந்தை
பொங்குதுயர் ஆற்றாதே புலம்புகின்றார்
பொறுமையுடன் ஒளிபொழிந்த பொன்விளக்கே
தங்குமனை இருள்கவியத் தவிக்கின்றோமே
தாங்கியெமை அணைத்தாயே தஞ்சமற்றோம்
மங்களமே நிலவுதிரு வானோர் மாடம்
மகிழங்கால் பெற்றவரை மறக்கமாட்டாய்.

#### நன்றி நவிலல்

என் துணைவியார் திருமதி மரியம்மா எட்வேட் பிறின்ஸ் அவர்களது இறுதியாத்திரையின் போது கலந்து அனுதாபமும் ஆதரவும் தந்தவர்களுக்கும், மலர் வளையம் உபகரித்தவர்களுக்கும், தோன்றாத் துணையாக இருந்து பிற உதவிகள் புரிந்தவர்களுக்கும் எனது அன்பு நிறைந்த நன்றியை அர்ப்பணிக்கிறேன்.

ஆன்ம சாந்திக்காக இறுதிப்பலி நிகழ்த்திய குருமாருக்கும் பலியிற் பங்கு பற்றி வேண்டுதல் செய்த அன்பர்கள், உறவினர்கள், அயலாருக்கும் என்றும் நன்றிக் கடப்பாடுடையேன்.

பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

A.E. பிறின்ஸ்
23, சுவாட்ஸ் லேன்,
யாழ்ப்பாணம் (48368)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்லாந்தில் அனர்த்தம்:

# ஹொட்டலில் பெரும் தீ!

# 93 பேர் கருகி மரணம்!!

**பாங்கொக், ஜூலை 13**

**தாய்லாந்தில் பட்டயாங் என்னும் கரையோர நகரில் உள்ள ஹொட்டல் ஒன்றில் நேற்று முன்தினம் இரவு மூண்ட பெரும் தீயினால் குறைந்தது 93 பேர் பலியாகினர்; நூற்றுக் கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.**

18 மாடிகளைக் கொண்ட அந்த ஹொட்டலின் கீழ்த் தளத்திலேயே தீ மூண்டது.

தீ பரவியதை அடுத்து அங்கு தங்கியிருந்த நூற்றுக்கணக்கான விருந்தினர்கள் அங்கிருந்து தப்புவதற்காக அங்கும் இங்குமாகத் தலைதெறிக்க ஓடி அல்லோலகல்லோலப்பட்ட வேளை — கட்டணம் செலுத்தாமல் அவர்கள் தப்பிச் செல்வதைத் தடுப்பதற்காக ஆபத்து வேளையில் ஆள்கள் வெளியேறுவதற்கான வாயில்களை ஹொட்டல் நிர்வாகத்தினர் மூடிவிட்டதாகச் சொல்லப்படுகிறது. இதனால் உள்ளே சிக்கியவர்கள் பெரும் எண்ணிக்கையில் உயிரிழக்க நேர்ந்ததாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களையும், இறந்து போனவர்களையும் மீட்கும் பணி நடைபெற்று வருகிறது. காயமடைந்தவர்களை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று தடம்புரண்டதில் அதிலிருந்தவர்களில் 11 பேர் உயிரிழந்தனர்

ஹொட்டல் இடிபாடுகள் அப்புறப்படுத்தப்பட்டதும் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

தாய்லாந்து நாட்டில் ஹொட்டல்களில் இடம்பெற்ற பெரும் மோசமான தீ விபத்து இது எனச் சொல்லப்படுகிறது.

(ஐ)

# சேகுவேராவின் எலும்புக் கூடு?

ஹவானா, ஜூலை 13

30 ஆண்டுகளுக்கு முன்னர் பொலீவிய இராணுவத்தினரை எதிர்த்துப் போராடிய போது தனது சகாக்களுடன் சேர்த்துக் கொல்லப்பட்ட கியூபாவின் கெரில்லாபோராளி ஏர்னெஸ்ரே சேகு வேராவினுடையதுஎன நம்பப்படும் எலும்புக் கூடு ஒன்றை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

ஆர்ஜன்ரீனா மற்றும் கியூப நாட்டு மனிதவியல் நிபுணர்கள் கண்டுபிடித்துள்ள ஓர் எலும்புக் கூட்டில் அதன் கைகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

சேகுவேரா காணாமற்போவதற்கு முன்னர் அவரது கைகள் துண்டிக்கப்பட்ட நிலையிலேயே இருந்தார் என்பதால் அது சேகுவேராவின் எலும்புக் கூடுதான் என்று நம்பப்படுகிறது.

(ஐ)

# ஒலிம்பிக் போட்டியில் ஹொங்கொங்

ஹொங்கொங், ஜூலை 13

150 ஆண்டுகால இடைவெளியின் பின்னர் ஹொங்கொங் விளையாட்டு வீரர்கள் அடுத்த ஒலிம்பிக் போட்டிகளில்கலந்து கொள்ளவுள்ளனர்.

இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று ஒலிம்பிக் குழுவின் தலைவர் ஜுவான் அன்ரோனியோ சமரஞ்சுக்கும், ஹொங்கொங் ஒலிம்பிக்குழு மற்றும் அமெச்சூர் விளையாட்டுச் சம்மேளனத் தலைவர் ஏ.டி. ஓ. சேல்ஸாக்குமிடையே கடந்த வாரம் கைச்சாத்திடப்பட்டது.

ஹொங்கொங் சீனாவுடன் இணைந்துள்ளதால் ஹொங்கொங் விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகள் 'ஹொங்கொங் - சீனா' என்ற பெயருடன் ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றுவர்.

(ஐ)

## ஆசியான் தீர்மானம்

கோலாலம்பூர், ஜூலை 13

தென் கிழக்கு ஆசிய நாடுகள் சங்கம் ஆசியானில் கம்போடியாவை சேர்த்துக் கொள்ளும் தீர்மானம் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

'ஆசியான்' அமைப்பின் வருடாந்தக் கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளது, அப்போது லாவோஸையும், பர்மாவையும் அங்கத்துவ நாடுகளாகச் சேர்த்துக் கொள்வது என ஆசியானின் வெளியுறவு அமைச்சர்கள் தீர்மானித்துள்ளனர்.

(ஐ)

## பலியானோர் எண்ணிக்கை உயர்வு

கரகாஸ், ஜூலை 13

தென்னமெரிக்க நாடான வெனிசுவேலாவில் ஏற்பட்ட மிக மோசமான நிலநடுக்கத்தில் இறந்து போனவர்களின் எண்ணிக்கை 67 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த 30 ஆண்டுகளில் நேரிட்ட மிகக் கடுமையான பயங்கர பூகம்பம் இது எனச் சொல்லப்படும் இந்த நிலநடுக்கத்தினால் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 439 ஆக உயர்ந்துள்ளது.

# கம்போடியாவில் அமைதி பேண பாதுகாப்புச்சபை வற்புறுத்துகிறது

## இரு பிரதமர்கள் மீதும் கண்டனம்

நியூயோர்க், ஜூலை 13

கம்போடியாவில் அமைதியை ஏற்படுத்துமாறு இரு பிரதமர்களையும் ஐ. நா. பாதுகாப்புச்சபை கேட்டுள்ளது.

கடந்த6ஆண்டுகளுக்கு முன்னர் செய்து கொண்ட உடன்படிக்கையை மதித்து நடக்குமாறு ஐ. நா. பாதுகாப்புச் சபை கம்போடியாவின் முதலாவது பிரதமர் இளவரசர் நொர்ரடோம்ரணறித், இரண்டாவதுபிரதமர் ஹுன்சென்னையும்கேட்டுள்ளது.

இதேவேளை — முதலாவது பிரதமர் இளவரசர் ரணறித் தாம் ''கெமரூச்'' கெரிலாக்களுடன் எவ்விதத் தொடர்பும் வைத்திருக்கவில்லை

**உலக அரங்கில்**

என்று கூறியிருக்கின்றார். தாம் மீண்டும் அதிகாரத்திற்கு வந்தால் ''கெமரூச்'' தரப்புக்கு அரசாங்கத்தில் இடமளிக்கப்போவதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

வாஷிங்டன் சென்றுள்ள இளவரசர் ரணறித் அமெரிக்க வெளியுறவு உதவி அமைச்சரைச் சந்தித்துப் பேசினார்.

(ஐ 5)

# 2,000 படங்களை விண்கலம் அனுப்பியது

இன்னும் 15 ஆண்டுகளில்—அடுத்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் — செவ்வாய்க் கிரகத்துக்கு மனிதர்கள் சென்று வர முடியும்.

இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளனர் 'நாசா' விஞ்ஞானிகள்.

'பாத் பைண்டர்' என்ற விண்கலத்தைச் செவ்வாயில் வெற்றிகரமாகத் தரையிறக்கியுள்ள அமெரிக்க விஞ்ஞானிகள் செவ்வாய்க் கிரகம் தொடர்பான ஆய்வுகள் இடைவிடாது தொடர்ந்து நடத்தப்படும் எனக் கூறியுள்ளனர்.

'பாத் பைண்டர்' விண்கலம் செவ்வாய் கிரகத்திலிருந்து இதுவரை 2 ஆயிரம் படங்களை அனுப்பியுள்ளது.

இதேவேளை — ''பாத் பைண்டரின்'' ஒரு பகுதியான ''சோஜேனர்'' என்னும் றோபோ ஊர்தி கடந்த வியாழனன்று ஓரிடத்தில் சிக்கிக் கொண்டதால் அன்று முழுவதும் அது திரட்டிய நுட்பத் தகவல்கள் பூமிக்குக் கிடைக்காமல் இழக்கப்பட்டுவிட்டன.

(ஐ-5)

## அம்பேத்கரின் சிலைக்கு செருப்பு மாலை:

# மும்பாய் கலவரத்தில் 10பேர் சூட்டுக்குப் பலி!

மும்பாய், ஜூலை 13

மும்பாய் நகரில் நேற்று முன்தினம் காலை பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தை அடக்க பொலீஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 10 பேர் பலியாகினர்.

மும்பாய் நகரில் கடந்த நான்கு ஆண்டு காலப் பகுதியில் நடந்த மிக மோசமான சம்பவம் இது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிற்படுத்தப்பட்ட இந்து தலித் இனத்தவரும் இந்தியாவின் அரசமைப்பை வரைந்தவருமான டாக்டர் அம்பேத்கரின் சிலை அவமதிக்கப்பட்ட சம்பவம் ஒன்றை அடுத்தே அங்கு ஆர்ப்பாட்டங்கள் வெடித்தன.

மும்பாய் நகரின் சேரிப்பகுதியில் அமைந்துள்ள அம்பேத்கரின் சிலைக்கு இரவு வேளையில் செருப்பு மாலை அணிவிக்கப்பட்டிருந்ததைக் கண்டு ஆவேசமடைந்த மக்கள் வன்முறையில் இறங்கினர். அதனையடுத்து ஆயுதம் தரித்த பொலீஸார் அங்கு அழைக்கப்பட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோரை கட்டுப்படுத்த பொலீஸார் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டி ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இச் சம்பவத்தில் பிற்படுத்தப்பட்ட மக்கள் சமூகத்தைச் சேர்ந்த 10 பேர் உயிரிழந்தனர்.

மும்பாயின் சேரிப்பகுதிகளில் உள்ள இந்த வறிய மக்களின் ஆதரவை சிவசேனை கட்சி பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

(ஐ)

# அனுராதபுரத்தில் பிணையில் விடப்பட்டோர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 13

பிணையில் விடுவிக்கப்பட்டு கடந்த மாதம் 27 ஆம் திகதி அனுராதபுரம் நீதிமன்றத்தில் தோற்றத் தவறியவர்களை மீண்டும் அடுத்த மாதம் 20 ஆம் திகதி புதன்கிழமை அனுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

அனுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டியவர்களை கப்பல் பயணத்திற்கு விண்ணப்பிக்குமாறும்—

அவர்களில் அடையாள அட்டை இல்லாதோரை தங்கள் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறும் —ஈ. பி. டி. பி. அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

(இ-10)

## விருந்துபசாரம்

வரணி மகா வித்தியாலய உயர் தர மாணவர் மன்றத்தின் மதியபோசன விருந்துபசார நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.15 மணிக்கு நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத்துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக கோட்டக்கல்வி அதிகாரி இ. கணேசனும் கலந்து கொள்வர்.

# ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்புக்கு இனி மூன்று பாடங்கள் மட்டுமே

கொழும்பு, ஜூலை 13

1999 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்கும் அதற்கு பின்னர் நடக்கும் பரீட்சைகளுக்குமான பாடங்கள் பற்றி கல்வி, உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

1999 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத்தோற்றும் மாணவர்கள் மூன்றுபாடங்களுக்கு மட்டுமே தோற்ற முடியும். பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்காக தோற்றுகின்ற இந்த மூன்று பாடங்களின் புள்ளிகளோடு மூன்றுமணித்தியாலம் கொண்ட உளச்சார்புப் பரீட்சை ஒன்றிலும் அவர்கள் சித்தியடைய வேண்டும்.

1995 ஆம் ஆண்டிலும், 1996 ஆம் ஆண்டிலும் உயர்தர வகுப்புக்களில் சேர்ந்த மாணவர்கள் பழைய நேர அட்டவணையைப் பயன்படுத்த வேண்டும். 1995 இல் உயர்தர வகுப்பில் சேர்ந்த மாணவர்கள் 1997ஆம் ஆண்டிலும் 1998 ஆம் ஆண்டிலும் பாடசாலை விண்ணப்பதாரர்களாகவும், 1999 ஆம் ஆண்டு தனிப்பட்ட விண்ணப்பதாரிகளாகவும் — பரீட்சையில் தோற்ற முடியும்,

1996 ஆம் ஆண்டு உயர்தர வகுப்பில் சேர்ந்த மாணவர்கள், 1998ஆம் ஆண்டிலும் 1999ஆம் ஆண்டிலும் பாடசாலை விண்ணப்பதாரர்களாகவும், 2000ஆம் ஆண்டில் அவசியம் ஏற்படின் தனிப்பட்ட விண்ணப்பதாரிகளாகவும்— பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாட்டியம் பயிலும் மாணவருக்கு வரப்பிரசாதமாக அமையும் நூல்

யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரி நாட்டிய ஆசிரியை ஸ்ரீமதி ஞானசக்தி கணேசநாதன் நாட்டியக் கலைபயிலும் மாணவர்களுக்கு வழங்கிய ஒரு வரப்பிரசாதமாக 'பரத நாட்டிய அபிநயம்' என்னும் நூல் அமைகிறது. நாட்டிய அறிமுறைப் பரீட்சையில் தோற்றும் மாணவ மணிகள் நாட்டிய சாஸ்திர நூல்கள் இல்லாமையால் பெரிதும் தவித்துக் கொண்டிருக்கும் வேளையில், அம்மாணவர்களுக்கு உள்ளங்கை நெல்லிக் கனியாகத் தெளிவாக நாட்டிய சாஸ்திர ஞானத்தைத் தந்திருக்கிறார் ஸ்ரீமதி ஞானசக்தி. வட இலங்கை சங்கீத சபையார் நடத்தும் நாட்டிய பரீட்சைகளுக்கும் மற்றும் கலாசாலைகளின் ஆண்டு ஆறு தொடக்கம் க.பொ.த. உயர்தர வகுப்பு வரைக்குமுள்ள பாட விதானத்தை யொட்டியும் இந் நூல் எழுதப் பெற்று இருக்கிறது.

நாட்டியக்கலையையும் அதன் சாஸ்திரங்களையும் அறிந்து கொள்வதற்கு போதிய நூல்கள் இந் நூலாசிரியைக்கு கிடைக்காததால் தான் பட்ட சிரமங்களையும் மனத்திற் கொண்டு, அப்படிச் சிரமங்கள் வருங்காலத்தில் மாணவர்களுக்கு உண்டாகக்கூடாது என்ற பொது நலம் கருதும் உணர்வே இந்த நூலை எழுதத் தூண்டியது போலும், மாணவ மாணவியருக்கு தேவையான நாட்டிய சாஸ்திரஞானத்தை தரும் வகையில் சிரோபேதம் திருஷ்டிபேதம், கண்டபேதம், ஸம்யுத அசஸம்யுத முத்திரைகள், அவற்றின் விநியோகங்கள், பாதபேதம், தேவஹஸ்தம், நவக்கிரக ஹஸ்தம், தசாவதார ஹஸ்தம், ஜாதி ஹஸ்தம், பாந்தவய ஹஸ்தம் ஆகியவைகளின் விளக்கத்தையும் விவரங்களையும் மாணவர்கள் நன்கு புரிந்து கொள்ளக் கூடிய வகையில் இலகு தமிழில் எழுதியமை பாராட்டுதற்குரியது அன்றியும் நாட்டிய சாஸ்திர நூலில் காணப்படும் ஸ்லோகங்களையும் தமிழில் மனனம் செய்வதற்காகவும் தந்துள்ளார்.

> நூல்: பரத நாட்டிய அபிநயம்
> ஆசிரியர்: திருமதி ஞானசக்தி கணேசநாதன்

சமஸ்கிருத மொழியிலுள்ள ஸ்லோகங்களை தமிழில் தரும்போது அந்தந்த எழுத்துக்குரிய இலக்கங்களைக் குறித்திருந்தால் மாணவர் மனனம் செய்யும் போது அக்ஷர சுத்தமாக மனனம் செய்ய இலகுவாய் இருந்திருக்கும். சமஸ்கிருத எழுத்துக்களையும் அவற்றுக்குரிய தமிழ் எழுத்துக்களையும் இலக்கங்களுடன் அடுத்த பிரசுரம்செய்யும் போது கவனித்தல், நலம் எனக் கருதுகிறேன்,

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் ''நாட்டியக் கலைமணி'' பட்டம் பெற்ற ஸ்ரீமதி ஞானசக்தி கணேசதாசனின் சேவை ஈழத்து நாட்டியக் கலை மற்றும்கலை வளர்ச்சியில் முக்கியத்துவம் பெறுகிறது. பல, பலமாணவ, மாணவியர் இந்நூலை பெரிதும் பயன்படுத்திப் பரீட்சையில் சித்தி காண்பதல்லாமல், நாட்டிய சாஸ்திர நுணுக்கமறிந்த சிறந்த கலைஞர்களாகவும் விளங்குவார்கள் என்பதில் ஐயம் இல்லை.

## நூல் வரிசை

பேராசிரியர் வி. சிவசாமி தமது முன்னுரையில் ''நல்ல தரமுள்ள இந்நூல் பாடசாலைமாணவர்களுக்கு மட்டுமன்றி, உள்வாரி, வெளிவாரி பட்டப்படிப்பு நடன மாணவர்களுக்கும், நடனத்தில் ஈடுபாடு உள்ள ஏனையோருக்கும் நன்கு பயன் படும் வகையில் அமைந்துள்ளது' எனக் குறிப்பிடுகின்றார் நாட்டியக்கலையின் நுணுக்கங்களை அறிந்து சிறந்த கலாசரனையைப் பெறவும் இந் நூல் உதவும் என்பதில் ஐயம் இல்லை, இதுசிறந்தபணி தரமான கலைத் தொண்டு. இன்னும் இதே போன்ற கலை நூல்களை எழுதி கலையுலகத்திற்குத் தந்து ஸ்ரீமதி ஞானசக்தி கலைச் சேவைகளைவளர்க்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

''கலாபூஷணம்'' யாழ்ப்பாணம் என். வீரமணிஐயர்.

# 20 பராமரிப்பாளர்களின் பணி யாழ். ஆஸ்பத்திரியில் நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ். ஆஸ்பத்திரியில் பெண் நோயாளர்களைப் பராமரிக்கும் வேலையில் ஈடுபட்டு வந்தவர்களது சேவை யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகத்தால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதனால் சுமார் 20 பராமரிப்பாளர்கள் வேலையை இழந்துள்ளனர்.

உதவியற்ற நோயாளர்களிடம் இருந்து பணம் பெற்று அவர்களைப் பராமரிக்கும் பணியில் இவர்கள் ஈடுபட்டு வந்தனர்.

இவ்வாறு சேவையாற்றும் பெண் பராமரிப்பாளர்களிடையே அண்மையில் ஏற்பட்ட சில பிணக்குகளை அடுத்து இவர்களது சேவையை நிறுத்திவிட ஆஸ்பத்திரி நிர்வாகம் முடிவு எடுத்ததாக அறியவருகிறது.

# யாழ். விவசாயிகளுக்கு நோர்வே உதவி

கொழும்பு: ஜூலை 13

நோர்வே அரசாங்கம் மற்றும் உலக உணவு விவசாய ஸ்தாபனம் என்பன யாழ். குடாநாட்டு விவசாயிகளுக்கென ஒரு கோடியே 80 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளன.

இடம் பெயர்ந்து மீண்டும் சொந்த இடம் திரும்பியுள்ள விவசாயிகளுக்கு தமக்கு வேண்டிய உபகரணங்களை பெற்றுக் கொள்வதற்காக இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதி உதவியின் படி தேர்ந்தெடுக்கப்பட்ட 8 ஆயிரத்து 500 விவசாயிகளுக்கு 2 மண்வெட்டிகள் வீதமும் மரக்கறி விதை பக்கற்றுகளும் வழங்கப்படவுள்ளன.

சிறந்த தர்த்திலான மரக்கறி விதைகளையும் வேறு பயிர்களையும் உற்பத்தி செய்வதற்காக திருநெல்வேலியில் கமத்தொழில் சேவை பயிற்சியளிக்கும் நிலையம் இந்த திட்டத்தின் கீழ் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த திட்டத்திற்கான ஒப்பந்தம் அண்மையில் நிதி அமைச்சில் கைச்சாத்திடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# ஆசிரியருக்கு கடன் உதவி

ஆசிரியர் நல கடன் சேமிப்புத் திட்டத்தின் (குருஷேத) கீழ் தென்மராட்சி கல்விக் கோட்ட ஆசிரியர்களுக்கு சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையில் கடன் வழங்கப் படுகிறது.

மேற்படி திட்டத்தில் அங்கத்தவராக உள்ள இரு ஆசிரியர்களின் பிணையுடன் ரூபா 50 ஆயிரம் வரை ஆசிரியர்களுக்கு கடன் வழங்கப்படுவதாக மக்கள் வங்கி முகாமையாளர் க. பாலச்சந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை சுயதொழில் முயற்சிக்கான கடன் பெற்று மீளச் செலுத்தியோருக்கு ரூபா 10 ஆயிரம் வீதம் கடன் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

# எண் கணித பாடத்தில் சித்தி பெற வினாக்களை தெரிவுசெய்யும் முறை

பா. கிருபாகரன
(பயிற்றப்பட்ட கணித ஆசிரியர்)

க. பொ. த. ப. சாதாரணதரப் பரீட்சையில் மற்றைய பாடங்களோடு ஒப்பிடும் போது கணித பாடத்தில் சித்தியடையும் மாணவர்களின் வீதம் குறைவாகவே காணப்படுகின்றது. கடந்த ஐந்து வருட பரீட்சை முடிவுகளை நோக்கும் போது கணித பாடத்தில் யாழ். மாவட்ட மாணவர்கள் சித்தியடைந்த வீதம் கவலைக்குரிய ஒன்றாகவே அமைகின்றது மாணவர்கள் பரீட்சை ஆரம்பமாவதற்கு முதல் கிழமைகளில் அதற்குத் தயாராவது கஷ்டம். எனவே கணித பாடத்தில் குறைவான தரத்தில் உள்ளவர்கள் இப்பொழுதிருந்தே தங்கள் பிரச்சினைகளை இனம் கண்டு அதற்கேற்ற வழிவகைகளை எடுப்பதன் மூலமே சித்தியை உறுதி செய்ய முடியும்.

க. பொ. த சாதாரண கணித பாட வினாத்தாளைப் பொறுத்த வரையில் பகுதி I 30 வினாக்களையும் பகுதி II 12 வினாக்களையும் கொண்டது. பகுதி I இல் 30 வினாக்களுக்கும் விடை அளிக்க வேண்டியுள்ளது. இவற்றில் கேட்கப்படும் வினாக்கள் பாடத்தின் அடிப்படை விடயங்களை பரீட்சிப்பதாக அமைகின்றன. உதாரணமாக சுருக்குக.

$$\frac{1/3 + 2/5}{1/5}$$

என்ற வினாவை நோக்குகின்ற போது பகுதி சமனில்லாவிடத்து அவற்றை கூட்டுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதையும் பெறப்படும் விடையை 1/5 ஆல் வகுக்கும் போது என்ன செய்ய வேண்டும் என்பதையும் பரீட்சிப்பதை நோக்காகக் கொண்டது.

எனவே மாணவர்கள் பகுதிகள் சமனில்லாதவிடத்து அவற்றின் பொது மடங்குகளிற் சிறியதை [பொ.ம.சி] கண்டுபிடிக்க வேண்டிய தேவையை அறிந்திருக்க வேண்டும். அத்துடன் பெறப்படும் விடையை வகுக்கும் முறையையும் அறிந்திருக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது எனவே கேட்கப்படுகின்ற ஒவ்வொரு வினாவிலும் ஒரு நோக்கம் அல்லது நோக்கங்கள் காணப்படும். அவற்றை மாணவர்கள் நன்கு அறிவதன் மூலம் தமது பிழைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

## பரீட்சையில் சித்தி பெற..

இதே போன்று பகுதி I இல் உள்ள [கடந்த கால] ஒவ்வொரு வினாவையும் நன்கு அவதானிப்பதன் மூலம் தமது சித்தியை உறுதி செய்ய முடியும்.

கேத்திர கணிதத்தைப் பொறுத்தவரை பகுதி - I இல் அதிகமாக 6 அல்லது 7 வினாக்கள் வருவதை அவதானிக்க முடிகின்றது. இப் பகுதியில் கேட்கப்படும் வினாக்கள் கேத்திர கணிதத்தின் அடிப்படை அம்சங்களை வினவுவதாக அமைகின்றன. அதாவது ஆண்டு 9, 10, 11 வகுப்புக்களில் உள்ள கேத்திர கணித விடயங்களை அறிவதன் மூலம் இவ் வினாக்களுக்கு இலகுவாக விடையளிக்க முடியும்.

அத்துடன் பகுதி - I இன் கடந்த கால வினாக்களை அவதானிக்கும் போது சில குறிப்பிட்ட பாட அலகுகள் ஒவ்வொரு வருட வினாத்தாள்களிலும் கேட்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

உதாரணமாக பல்கோணி சுட்டி மடக்கை, பிரதியீடு, வேலை காலம் பணம் ஒழுக்கு என்பவற்றைக் குறிப்பிடலாம். இந்த அலகுகளில் வந்த வினாக்களை அவதானிப்பதன் மூலம் அவ்வினா அமைப்பினை அறிய முடியும்.

பகுதி II வினாத்தாள் 12 வினாக்களைக் கொண்டது. இவற்றில் ஏதாவது 10 வினாக்களுக்கு விடை அளிக்க வேண்டியுள்ளது. இப்பத்து வினாக்களையும் தெரிவு செய்வது ஒவ்வொரு மாணவரைப் பொறுத்தவரை வேறுபடும். பின் தங்கிய நிலையில் உள்ள மாணவர்கள் இப் பகுதியில் சுலபமான பகுதிகள் சிலவற்றை தேர்ந்தெடுத்து மீண்டும் மீண்டும் பயிற்சி செய்வதன் மூலம், தாங்கள் சித்தியடையும் சாத்தியம் வழுவாது பார்த்துக் கொள்ள முடியும்.

ஆகையால் சுலபமான பகுதிகள் என்று கூறும் போது காரணிப் படுத்தல், சுட்டி, மடக்கை, தொடை, நிகழ்தகவு, வரைபு, கூட்டல் பெருக்கல் விருத்தி, எண் கணித வினா, அமைப்பு, புள்ளிவிவரவியல் போன்ற பகுதிகளைக் குறிப்பிடலாம்.

### வினாத்தாளை அறிய வழி

இப்பாடப்பரப்புகளில் [illegible] வர்கள் தெளிவு [illegible] மூலம் இலகுவாக விடையளிக்க முடியும்; அதன் மூலம் எட்டு வினாக்களுக்கு மேல் இலகுவாக விடையளிக்க முடியும் என்பதை நினைவிற் கொள்க. இந்தப் பகுதிகளில் வந்த வினாக்களை அவதானித்து கற்பதினால் இப் பகுதிகளுக்கு இலகுவாக புள்ளிகள் எடுக்க முடியும். உதாரணமாக பகுதி II இல் 1 ஆம் வினாவில் 1 ஆம் பகுதியாக அதிகமாகக் கேட்கப்படுவது காரணிப்படுத்தல் என்ற பகுதியாகும்.

இலகு பகுதிகள் என்று குறிப்பிட்ட ஒவ்வொரு அலகையும் அவற்றில் வந்த வினாக்களை கற்பதன் மூலம் தமது வினாத்தாளை அறிய முடியும். அத்துடன் ஒரு வினாவை தெரிவு செய்யும் போது அந்த வினாவில் ''ஆ'' பகுதியில் கேட்கப்படுகின்ற வினாவை அறிவதன் மூலம் முழு வினாவிற்கும் இலகுவாக புள்ளிகளைப் பெற முடியும்; உதாரணமாக தொடை என்றபகுதியை கேட்கின்றபோது சில வேளைகளில் அது ஒரு தனி வினாவாக அமைந்ததுண்டு; அல்லது ''அ'' பகுதி தொடையாகவும் ''ஆ'' பகுதி நிகழ்தகவாகவும் அமைவதுண்டு. இரண்டு பகுதிகளாக கேட்கின்றபொழுது அவற்றின் வேலையின் அளவும் மாறுபடுவதை அவதானிக்க முடிகின்றது.

இதே போன்று கூட்டல் விருத்தி ''அ'' பகுதியாகவும் பெருக்கல் விருத்தி ''ஆ'' பகுதியாகவும் வருவதை அவதானிக்க முடிகின்றது புள்ளி விவரவியல் வினாவை அவதானிக்கின்ற போது ''அ'' பகுதி இடை காண்பதாகவும் ''ஆ'' பகுதி மீடிறன் பல்கோணி அல்லது வலையுருவரையம் அல்லது காலணையாகவும் அமைவதை அவதானிக்க முடிகின்றது. எனவே இவ்வினாவிற்கு விடையளிக்கத்தயாராகும் போது ''ஆ'' பகுதிக்கு தேவையானவற்றையும் ஆயத்தம் செய்ய வேண்டும்.

அடுத்து சில வினாக்களை அவதானிக்கின்றபோது அவை ஒவ்வொரு வருடமும் நிச்சயமான வினாக்களாக அமைவதை கவனிக்கலாம். உதாரணமாக வரைபு, அமைப்பு, புள்ளிவிவரவியல் கூட்டல் விருத்தி, பெருக்கல் விருத்தி, திரிகோணகணிதம் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

வரைபு போன்ற பகுதிகளுக்கு அட்டவணையில் கேட்கப்படும் இரு வெற்றிடங்களை நிரப்பி புள்ளிகள் குறித்து வரைபை வரைந்து குறிப்பிட்ட வினாக்களுக்கு விடை அளிப்பதன் மூலமாக மாணவர்கள் அந்த விடைக்கு முக்கால் பங்கு புள்ளிகளுக்கு மேல் பெற முடியும்.

அத்தோடு சில வேளைகளில் சில சிறு மாறுதல்கள் ஏற்படுவதையும் கவனிக்கலாம்.

1996 ஆம் ஆண்டு வினாத்தாளில் எண்கணிதம் என்ற பகுதியில் பகுதி II இல் ஆண்டு எட்டுக்கு உரிய பாட விடயமான பணமும் காலமும் என்ற பகுதியில் கேட்கப்பட்டதை அவதானிக்கலாம்.

இவ்விடயத்தி எளிய வட்டி, கூட்டுவட்டி, சதவீதம், வரி, பங்குடமை, வியாபாரப்பங்குகள், வாடகைக் கொள்வனவு என்னும் வினாக்கள் அமைவதை அவதானிக்க முடிகின்றது. எனவே மாணவர்கள் விடை அளிக்க ஆயத்தமாகும் போது அந்தந்தப் பாடத்துடன் தொடர்புடைய சகல

(7ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு மாதங்கள் தாமதித்து வந்த ஓய்வூதிய அட்டவணை - காசோலை

தென்மராட்சி, ஜூலை 13

கடந்த ஜனவரி மாதம் பத்தாம் திகதி கொழும்பு உள்ளூராட்சி திணைக்கள ஓய்வூதியப் பிரிவினரால் அனுப்பப்பட்ட ஜனவரி மாத ஓய்வூதிய அட்டவணையும், காசோலையும் ஆறு மாதங்களின் பின்னர் கடந்த வாரம் பளை கிராமிய வங்கிக்கு வந்து சேர்ந்துள்ளன.

காசோலையை மாற்றுவதற்கான பாவனைத் திகதி காலாவதியாகிவிட்டதால் இக்காசோலைக்குரிய கொடுப்பனவுகளை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது இந்தக் காசோலை மீள் திகதியிடுவதற்காக கொழும்பு உள்ளூராட்சி ஓய்வூதியக் கிளைக்கு திருப்பி அனுப்பப் பட்டுள்ளது.

இதேவேளை ஜூலை மாதத்துக்குரிய உள்ளூராட்சி ஓய்வூதியர்களின் வவுச்சர்கள் கடந்த வாரம் வந்துள்ள போதிலும், இக்கொடுப்பனவுக்கான காசோலையும் பட்டியலும் வந்து சேரவில்லை எனவும் — கடந்த ஜூன் மாத வவுச்சர்களும் உரியதிகதியில் வந்த போதிலும் பதினைந்து தினங்களின் பின்னரே காசோலை வங்கிகளுக்கு வந்து சேர்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

## ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் குருநகர் வந்து சேர்ந்தனர்

குருநகர் ஜூலை 13

கடந்த வாரம் வன்னியில் இருந்து குடாக் கடல் ஊடாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் குருநகர் இறங்குதுறைக்கு வந்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை 74 குடும்பங்களைச் சேர்ந்த 239 பேரும் —

செவ்வாய்க்கிழமை 117 குடும்பங்களைச் சேர்ந்த 329 பேரும் —

புதன்கிழமை 241 குடும்பங்களைச் சேர்ந்த 776 பேரும் — வந்துள்ளார்கள்.

இவர்கள் அனைவரும் குருநகர் சிநோர் வலைத்தொழிற்சாலை அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள்.

(இ-51)

## முல்லைத்தீவுப் பெண்ணை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

### புலிகளுடன் தொடர்பாம்

கொழும்பு, ஜூலை 13

கொழும்பில் தங்கியுள்ளதாகக் கருதப்படும் விடுதலைப் புலிகள் உறுப்பினரான முருகன் என்பவருக்குப் பணமும், அந்தரங்கக் கடிதமும் எடுத்துச் சென்றார் என்ற குற்றச்சாட்டில் முல்லைத்தீவைச் சேர்ந்த பெண் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்,

காளிமுத்து கிருஷ்ணவேணி என்ற இந்தப் பெண் கொழும்பு மாவட்டநீதிவான் முனிதாஸ நாணயக்கார முன் ஆஜர் செய்யப்பட்ட சமயமே விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (இ-153)

## ஆஸ்பத்திரியில் தண்ணீர்த் தொட்டி

சாவகச்சேரி ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவுக்கு வரும் நோயாளர்களின் நன்மைகருதி குடி தண்ணீர்த் தொட்டி ஒன்று ஆஸ்பத்திரி வளவில் வைக்கப்படவுள்ளது.

இதற்கான கட்டட வேலைகள் கடந்த செவ்வாயன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் பொதுமக்களின் பாவனைக்கு தொட்டி திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வீர மக்கள் தினத்தை ஒட்டி புளொட் அமைப்பினரால் இத்தொட்டி அமைக்கப்பட்டு வருகிறது.

(ஐ-117)

## மண்வெட்டி விநியோகம் ஒத்திவைப்பு

மானிப்பாய், ஜூலை,13

உடுவில் கமநல கேந்திர நிலையத்தில் முன்னர் அறிவிக்கப்பட்டபடி விவசாயிகளுக்கு நேற்று மண்வெட்டிகள் வழங்கப்படவில்லை. இதனால் தூர இடங்களில் இருந்து வந்த விவசாயிகள் பலர் ஏமாற்றமடைந்தனர்.

பின்னர் ஒரு தினத்தில் விவசாயிகளுக்கு மண்வெட்டிகள் விநியோகிக்கப்படும் என்று பெரும்பாக உத்தியோகத்தர் பொ. குகநாதன் தெரிவித்துள்ளார். (ஐ-90)

## கருத்தரங்கு

யாழ். மாவட்ட சாரணர் சங்கத்தினால் சாரணர் தலைவர்களுக்கும், குருளைச் சாரணத் தலைவர்களுக்கும் நடத்தப்பட்ட அறிமுகப் பயிற்சியில் பங்கு பற்றியோருக்கான கருத்தரங்கு எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(ஐ-17)

## கிறிஸ்தவ பாட மீட்டல் வகுப்பு

ஜி. சீ ஈ. உயர்தர வகுப்புக்கான கிறிஸ்தவ பாட மீட்டல் வகுப்புகள் பழைய' புதிய பாடத்திட்டத்துக்கு அமைய இன்று முதல் எதிர்வரும் புதன்கிழமை வரை காலை 9 30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற உள்ளது.

புதிய பாடத்திட்டத்திற்கு உரிய புத்தகங்கள், வேதாகமம், புனித பவுலின் திருமுகம், பவுல் திருமுக வினாவிடை, திருச்சபைச் சரித்திரம், இலங்கைத் திருச்சபைச் சரித்திரம், மாதிரி வினாத்தாள் என்பவையும் அங்கு விற்பனை செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-5)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 13

பாடசாலை தொகை மதிப்பு தொடர்பாக கோப்பாய்க் கோட்ட அதிபர்களுக்கான கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஐ)

### வெற்றி உறுதி ராணுவ நடவடிக்கை:

## குறுகிய காலத்தில் குறிக்கோள் எட்டப்படும் என்கிறார் அனுருத்த

கொழும்பு ஜூலை 13

''ஜெயசிகுறு'' (வெற்றி உறுதி) இராணுவ நடவடிக்கையின் குறிக்கோள் குறுகிய காலத்துக்குள் அடையப்படும்.

நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை விவாதத்தை முடித்துவைத்துப் பேசிய பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை மேற்கண்டவாறு கூறினார்.

நோக்கம் நிறைவேறும் வரை 'வெற்றி உறுதி' இராணுவநடவடிக்கைதொடரும். இந்த இராணுவ நடவடிக்கையின் போது 19 அதிகாரிகள் அடங்கலாக 359 படையினர் உயிரிழந்துள்ளனர் என்றும் அமைச்சர் தெரிவித்தார்

71 அதிகாரிகள் உட்பட ஆயிரத்து 750 படையினர் காயமடைந்தார்கள் இவர்களில் 763 படையினர் மீண்டும் யுத்த முனைக்கு திரும்பியுள்ளனர் என்றும் அவர் கூறினார். (இ.4)

## சூரியமூர்த்திக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

திருகோணமலை நகரசபைத் தலைவர் சூரியமூர்த்திக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

வழமையாக அவரைச் சந்திக்க சகலரும் அனுமதிக்கப்பட்டிருந்தனர்: தற்பொழுது ''சிட்'' மூலம் அனுமதி பெற்றே அவரைச் சந்திக்க முடியும். (இ-3-150)

### வடமராட்சி கிழக்கில

## மருத்துவமாது இன்றி கர்ப்பிணிகள் அவதி!

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி ஆஸ்பத்திரியில் கடந்த ஒரு வருடமாக மருத்துவமாது இல்லாததால் செம்பியன்பற்று, தாளையடி வத்திராயன், ஆழியவளை, மருதங்கேணி, சோரன்பற்று, மாசார் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பிரசவத் தாய்மார் பெரிதும் கஷ்டமுறுவதாக தெரிவித்தனர்,

இங்கு கடமையாற்றிய மருத்துவமாது வன்னிக்கு இடம் பெயர்ந்துள்ளதால் பதில் கடமைக்கு நியமிக்கப்பட்ட மருத்துவமாது பாதுகாப்பு மண் அணைக்கு அப்பால் இருப்பதால் பிரசவத் தாய்மார் ஒன்பது மைல்களுக்கு அப்பால் உள்ள பளை பிரசவ விடுதிக்குச் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மருதங்கேணி ஆஸ்பத்திரியில் மட்டுமே பிரசவ விடுதி இருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-117)


## 41 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சக மாணவனாகிய

நந்தகோபனின் தந்தை

இளையதம்பி சிவலிங்கம்

03 - 06 - 97 அன்று இளவாலையில் இடம் பெற்ற அசம்பாவிதத்தின் போது அகால மரணமடைந்துள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

உயர்தர வகுப்பு மாணவர்கள்,

யா/ அருணோதயக் கல்லூரி.

(48366)

## வியாபாரிகள் கவனத்துக்கு!

தலைநகர் கொழும்பில்

வீட்டுப்பாவனைக்குரிய பிளாஸ்ரிக் பொருள்களை

(Batick Colour)

மொத்தமாகப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

**UNIQUE AGENCIES**

**138, WOLFENDHAL STREET,**

**COLOMBO. —13**

(48283)

யா| புனித ஹென்றியரசர் கல்லூரி

(இளவாலை)

## கல்லூரித்தின விழா

14 - 07 - 97 திங்கட்கிழமை அன்று நடைபெறும் கல்லூரித்தின விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கல்லூரியின் பழைய மாணவர்கள், பணியாற்றிய ஆசிரியர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்

[புனித ஹென்றியரசர் சமூகம் சார்பாக]

(48293)

யாழ். ஈச்சமோட்டை, கலட்டிப்புலம்

அருள்மிகு

ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தான

பரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

கடந்த 11 - 07 - 97 வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆலய மண்டபத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட முடிவுகள்.

| பரிசு | | சீட்டிலக்கம் |
|---|---|---|
| 1 ஆம் பரிசு | A. K. S. மோட்டேஸ் சாவகச்சேரி. (லுமாலா துவிச்சக்கரவண்டி) | 565 |
| 2 ஆம் பரிசு | கைலாசபிள்ளை அன் சன்ஸ் யாழ்ப்பாணம். (வானொலிப் பெட்டி) | 274 |
| 3 ஆம் பரிசு | அம்பிகா பல்பொருள் வாணிபம் நெல்லியடி (விலையுயர்ந்த சேலை) | 1490 |
| 4 ஆம் பரிசு | சி. பராசக்தி செட்டித்தெரு, நல்லூர் (பெற்றோல் மக்ஸ்) | 1006 |
| 5 ஆம் பரிசு | பிரபா ஸ்ருடியோ யாழ்ப்பாணம். (குக்கர்) | 132 |

ஒவ்வொரு சுவர்க்கடிகார வீதம் ஆறுதற் பரிசுகள் பெறும் ஐவர் விவரம்

| | ரிக்கற் இலக்கம் |
|---|---|
| 1. S. தேவசுந்தம் சுண்டுக்குளி — | 181 |
| 2. பிரபா கஸ்தூரியார் வீதி — | 346 |
| 3. ரஜனி சலூன் கொழும்புத்துறை — | 936 |
| 4. ம. தர்மலிங்கம் C. T. B கோண்டாவில் — | 203 |
| 5. — | 854 |

பரிசுபெற்றோர் தமது பரிசுப் பொருள்களை ஆலயச் செயலகத்தில் இரண்டு வாரங்களுக்குள் பெற்றுக்கொள்ளவும்.

★ ஆலய புனருத்தாரணத் திருப்பணி நிதிக்காக நடத்தப்பட்ட இச் சீட்டிழுப்பிற்கு எமக்கு சகல வழிகளிலும் உதவியவர்களுக்கும், விசேடமாக பரிசுப் பொருள்கள் யாவற்றையும் அன்பளிப்பாகத் தந்துதவிய

யாழ்ப்பாணம் வர்த்தகர்களுக்கும்

எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- பரிபாலன சபை

(48373)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பருத்தித்துறை, தும்பளை மணியகாரன் சந்திக்கு அருகே 4 பரப்புடன் கல் வீடு வளவு உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி யோகாம்பிகை வரதராசா, தும்பளை, பருத்தித்துறை. [சி/1101]

பல இன வளர்ப்பு மீன்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: அ. கமலேஸ்வரி (குட்டி) 588/8, நாவலர் வீதி, (ஸ்ரான்லி கல்லூரி முன் ஒழுங்கை). காலை 11.00 மணியில் இருந்து பார்வையிடலாம். [48330]

Finchers குருவிகள். சிறிய கலப்பின பசு, Dash hound நாய், யமுனாபாறி ஆடு என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: சுகுமார், சீரணி, டச்சு வீதி, சண்டிலிப்பாய். [47319]

### தவறிவிட்டது

முருகேசு நாகராசா என்பவரது 241892646V இலக்க தேசிய அடையாள அட்டையும், 0907013586 இலக்க விசேட அடையாள அட்டையும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும் முருகேசு நாகராசா, அளவெட்டி மேற்கு, அளவெட்டி. [48353]

### திருத்துதல்

சகல விதமான தட்டச்சு இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள், சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: R. மருதம், 66, மணிக்கூட்டு வீதி. (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். [48263]

### தேவை

புதிய பழைய பாவனைக்கு உதவாத தட்டச்சு இயந்திரங்கள் .றோணியோ இயந்திரங்கள் தேவை. தொடர்பு: R. மருதம், 66, மணிக்கூட்டு வீதி (ஆஸ்பத்திரி முன்பாக), யாழ்ப்பாணம் .[48264]

### காணவில்லை

பசுமாடுகள் இரண்டைப் பட்டியில் இருந்து காணவில்லை. மாவெள்ளை பசு கன்று ஈன 15 நாள்கள் உள்ளது. சிவப்பு நெற்றியில் வெள்ளைச் சுட்டி 6 மாத சினை. இவை இரண்டும் கோயில் பசுக்கள். கண்டவர்கள் உடன் அறியத்தரவும். தொடர்பு: செ. குகநாதன், செல்வநாகபூஷணி அம்பாள் திருக்கோயில், கந்தர்மடம். [48372]

### பௌதிகவியல்

சிறுகுழுவாகவோ அல்லது தனியாகவோ பௌதிகவியல் வகுப்புகளுக்கும், நடைபெறவிருக்கும் இறுதிப் பரீட்சைக்கான கடந்த கால வினாக்கள் மீட்டல் செய்யவும் தொடர்பு:- 122, சிவன்கோயில் வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். [48371]

### வீடு விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில் நான்கு படுக்கை அறைகளையும் சகல வசதிகளையும் கொண்ட வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 88, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம். [48370]

### தேவை

வேம்பு, இலுப்பை, பனம் பழம் மற்றும் பயன்தரும் விதைகள் சேகரிப்பதில் ஆர்வமுள்ளோர்கள். தொடர்பு: சிவதர்சினி, சாவகச்சேரி. [48377]

---


## பரமகுரு முதலியப் பெருமான் தேவஸ்தானம்

வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை

### அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவு

யா/வட்டு. திருஞானசம்பந்த வித்தியாலய அதிபர், வட்டு. தெற்கு J/165 பிரிவு கிராம உத்தியோகத்தர் ஆகியோர் மேற்பார்வையில் இடம்பெற்றது.

1ஆம் பரிசு இல. 460. 2ஆம் பரிசு இல. 635. 3ஆம் பரிசு இல. 626.

ஆறுதல் பரிசு இல. 471 310. 962. 1151. 517. 970. 811. 1590. 767. 1238. பரிசுக்குரியவர்கள் மேற்படி விலாசத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

- ஆலய பரிபாலன சபை

(48358)

---

## 'TASTY' இன் பொருள்கள்

சுவையான 'TASTY' இன் தயாரிப்புக்கள் தற்பொழுது எங்கும் கிடைக்கும்

1. நெல்லிரசம் — 625ml, 750ml அளவுகளிலும்
2. விளாம்பழ ஜாம், ஸ்டோபரி ஜாம், அன்னாசிப்பழ ஜாம் — என்பன 450g, 850g அளவுகளிலும்
3. தேசிக்காய் ஊறுகாய் — 450g அளவிலும்
4. Lime Cordial, Pineapple Cordial என்பன 750ml அளவிலும் கிடைக்கும்

வாங்கிச் சுவைத்து இன்பத்தை அனுபவியுங்கள் சுவையின் மகாராசன் TASTY

எம்மால் திருகுமூடி, ஜாம் போத்தல் கொள்வனவு செய்யப்படும்.

### ரேஸ்றலைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிரெட்

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

(48317)

---

## ANNUAL GENERAL MEETING Of the JAFFNA COLLEGE ALUMNI ASSOCIATION

and

Felicitation to the Jubilarians

On


Saturday 19th July 1997

Lunch Ticket will be available - Rs. 75/-

(48348) - Secretary


---

## 21ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 1933 — 04 — 06 | 1997 — 06 — 22 |

செல்வி

### அகிலாண்டேஸ்வரி அப்பாத்துரை

(ஓய்வு பெற்ற K V S. உத்தியோகத்தர், திருநெல்வேலி கிருஷிக பாடசாலை.)

22 - 06 - 97 இல் சிவபதமடைந்த எம் குடும்ப விளக்கின் ஆத்ம சாந்திக்காக இறையருள் வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி!

- குடும்பத்தினர்

10, செம்மணி வீதி, நல்லூர். (48215)

---


புன்னகை பூத்திடும்
இள நங்கையின் முகத்தினில்
இத்தனை மகிழ்ச்சியா? ஆம்
அத்தனைக்கும் காரணம்
அவள் முகத்தினில் என்றும்
சங்கமம்

### றோயல் றோஸ் டல்கம் பவுடர்

தீபத்தின் ஒளியினிலே
தீபாவின் அழகு கண்டேன்
தேவதை போல் அவள் திகழ
அவள் முகத்தில் சங்கமம்

### தீபா றோஸ் டல்கம் பவுடர்

தயாரிப்பாளர்:

## றோயல் இன்டஸ்ரீஸ்

22 1/1, ஆதமலி பில்டிங், ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு - 13.

சந்தைப்படுத்துவோர்:

## சிவா நறுமணப் பூங்கா


288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம்:- 326679

(48352)


---

## காணவில்லை



58வயதுடைய 5½ அடி உயரம், சிவப்பு நிறம், மெலிந்த உருவமுள்ள மனநோய் உள்ளவரான

தம்பு வேலுப்பிள்ளை (தெய்வேந்திரம்)

என்பவரை 18 - 05 - 97 ஆம் திகதி தொடக்கம் காணவில்லை. தகவல் அறிந்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

மார்க்கண்டு சரஸ்வதி, கோகுலவீதி, கோண்டாவில் வடக்கு.

(48351)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 10 — 04 — 1932 | 13 — 06 — 1997 |

### சரஸ்வதிப்பிள்ளை இளையதம்பி

31 ஆம் நாள் — 13-07—1997

13-07-1997 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் கிரியைகளிலும் மதியபோசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி.

தகவல்:-

கணவன்:- திரு. க. இளையதம்பி
பிள்ளைகள்:- திருமதி கனகாம்பிகை கந்தசாமி, திருமதி பராசக்தி ஆறுமுகஜோதி
மருமக்கள்:- திரு செ. கந்தசாமி, திரு வ. ஆறுமுகஜோதி
பேரப்பிள்ளைகள்:- யாழினி, பிரணவன்.

விடத்தற்பளை, மிருசுவில்.

(சி/1114)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## புதுக்கிய பதுக்கல்!

அரிசி, சீனி மற்றும் உணவுப் பொருள்களுக்கும் மண்ணெண்ணெய், சவர்க்காரம், சிமெந்து உட்பட பல பாவனைப் பொருள்களுக்கும் குடாநாட்டில் திடீரெனத் தட்டுப்பாடு தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இது நிச்சயமாக செயற்கைத் தட்டுப்பாடும் விலை உயர்வும் என்பதில் எவருக்கும் எவ்வித சந்தேகமும் இல்லை. பொருள்களைப் பதுக்கிச் செயற்கைத் தட்டுப்பாட்டைஉண்டாக்கி விலைகளை உயர்த்திய வர்த்தர்களுக்கு மட்டுமன்றி பொருள்களைச் சேகரித்து வைப்பதற்காக முண்டியடித்த பண வசதியுள்ள பாவனையாளர்களுக்கும் இது நன்றாகத் தெரியும்.

குடாநாட்டு வர்த்தகர்கள்-பாவனையாளர்கள் கடந்த ஏழுஆண்டு காலத்தில் வரித்துக் கொண்ட மிகக்கெட்ட பழக்கங்களில் ஒன்றுதான் செயற்கைத் தட்டுப்பாட்டை உருவாக்குவதும், அதற்கு உதவுவதும் ஆகும்.

அந்தக் காலப் பகுதியில் உணவுப் பொருள்கள், மருந்துப் பொருள்கள் மற்றும் பாவனைப் பொருள்களுக்கு உண்மையான தட்டுப்பாடும் பற்றாக்குறையும் அடிக்கடி ஏற்பட்டதை மறந்து விடுவதற்கில்லை. அரசாங்கம் விதித்த பொருளாதாரத் தடையாலும் போக்கு வரத்துக் கஷ்டங்களாலும் மக்களுக்கு வேண்டிய பொருள்கள் அப்போது தாராளமாகக் கிடைக்கவில்லை.

இதனைத் தக்க சந்தர்ப்பமாகவும் வாய்ப்பாகவும் மாற்றிக் கொண்டு வர்த்தகர்கள் திடீரெனச் செயற்கைத் தட்டுப் பாடுகளை உருவாக்கி வந்தனர். பணவசதி உள்ள பாவனையாளர்கள் பொருள்களைச் சேகரித்து வைப்பதற்காக முண்டியடித்து செயற்கைத் தட்டுப்பாட்டுக்கும் விலை உயர்வுக்கும் ஒரு விதத்தில் உதவினார்கள்.

குடாநாடு அரசாங்க நிர்வாகத்தின் கீழ் வந்திருக்கும் இவ்வேளையிலும் — இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ள இப்போதும் — முந்திய அநியாயத்தை வர்த்தகர்கள் மீண்டும் புதுப்பித்துள்ளனர்.

அரசாங்கத் தரப்புக்கும் தனியார் துறைக்கும் கப்பல்களில் கொண்டுவரப்பட்ட பாவனைப் பொருள்கள் — சரக்குக் கப்பல் கடத்தப் பட்டதாகச் செய்தி வந்ததும் திடீரென மறைந்து போனதா? பல கிழமைகளாகச் சரக்குக் கப்பல் வராதிருப்பின் பொருள் பற்றாக்குறை ஏற்படக்கூடும் என்று அஞ்சலாம்.

ஆனால் சம்பவம் நடைபெற்ற இரண்டாவது நாள் பொருள்கள் நிலத்துக்குக் கீழ் போய்விட்டன — பதுக்கப்பட்டுவிட்டன! எப்படி?

யாழ். குடாநாட்டு மக்கள் தொடர்ந்து பல கஷ்டங்களை அனுபவித்தவர்கள். அனுபவிக்கின்றார்கள் அதனைச் சிறிதும் கருத்தில் கொள்ளாமல் அவர்களிடம் ''கொள்ளை'' அடிக்க முற்பட்டுள்ள வர்த்தகர்களுக்குச் சிறிதளவாவது மனச்சாட்சி உண்டா? தங்களுக்குச் சமூகப் பொறுப்பு உண்டு என்பதனை இவர்கள் அடிக்கடி மறந்துவிடுகிறார்கள்.

குடாநாட்டு மக்களைச் சுரண்டிப்பணம் சம்பாதிக்க பழகிக் கொண்டவர்களை எந்த நிர்வாகத்தாலும் தடுத்து நிறுத்த முடியாது என்ற நிலைப்பாடே இதுவாகும்!

இப்போதைய அரச நிர்வாகத்துக்கு அவர்கள் விடுக்கும் சவாலாகவே இதனைக் கொள்ளலாம்!

# அரசை ஆதரிப்பதை இ.தொ.கா. மீள்பரிசீலனை செய்யவேண்டிவரும்

### நாடாளுமன்றத்தில் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 13

அரசாங்கத்திடம் 6 அம்சக் கோரிக்கை ஒன்றை இ. தொ. கா ஏற்கனவே முன்வைத்துள்ளது. அதனை அடுத்த வரவு செலவுத்திட்ட உரைக்கு முன்னர் அரசு கருத்திற்கொண்டு செயற்படாவிட்டால் அரசுக்கு வழங்கும் ஆதரவை இ. தொ. கா. மீள்பரிசிலனை செய்ய வேண்டிவரும்.

இ. தொ. கா. கண்டி மாவட்ட எம்.பியான எஸ். இராஜரட்ணம் நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றில் நடைபெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் கலந்து கொண்டு பேசும் போது அவர் மேலும் கூறியதாவது:-

5 வருடங்களுக்கு வடக்கு—கிழக்கு நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் தற்காலிகமாகக் கையளியுங்கள் என்று நாம் முன்னரே கூறினோம். அது புறக்கணிக்கப் பட்டது. யுத்தம் தொடர்கிறது யுத்தம் தமிழ் மக்களைத் தொடர்ந்து வாட்டுகிறது.

தமது தேவைகளுக்காக கொழும்பு வரும் தமிழ் மக்கள் தங்குவதற்கு இருந்த விடுதிகளும் மூடப்பட்டுள்ளன. வவுனியாவில் 14 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் தமது எதிர்காலம் எதுவென தெரியாத நிலையில் அகதி முகாம்களில் அல்லலுறுகின்றனர்.

தமது தேவைகளுக்காக கொழும்பு வரும் வடபகுதி மக்கள் மட்டுமல்ல மலையக மக்களும் கைது செய்யப்படுகின்றனர். எமது இளைஞர்கள் பலர் போகம்பர சிறைச் சாலையில் விசாரணையின்றி அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை விடுதலை செய்ய வேண்டும்.

இப்படி அவர் கூறினார். (இ-4)

## லொறி உரிமையாளர் சங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த லொறி உரிமையாளர்கள் லொறி உரிமையாளர் சங்கம் ஒன்றை அமைத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சங்க அங்குரார்ப்பண வைபவத்தை யாழ். அரசாங்க அதிபர் க சண்முகநாதன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

இச் சங்கத்துக்கு பழைய பூங்கா வீதியில் அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (இ-15)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 13

வரணி மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம்செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிமுதல் நடைபெறவுள்ளது. வடக்கு கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சு. டிவகலாலா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வலயம் - 1 கல்விப்பணிப்பாளர் சு. இரத்தினராசாவும், சாவகச்சேரி கோட்டக் கல்வி அதிகாரி இ. கணேசனும் கலந்து கொள்வர். (ஐ)

# வீடுகளில் திருடப்பட்ட பொருள்கள் பொம்மைவெளிப் பகுதியில் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13

பொம்மை வெளிப் பகுதியில் ஆள்கள் இல்லாத வீடுகளில் இருந்து திருடப்பட்டு அங்குள்ள வீடு ஒன்றில் ஒளித்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் கூரைச் சீற்றுக்கள், ஓடுகள் மற்றும் பல பொருள்கள் என்பன கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் வழங்கிய தகவலை அடுத்து அப்பகுதி கிராமசேவையாளர் எஸ். ரீ. சகுந்தலாதேவி சம்பந்தப் பட்ட வீட்டில் இருந்து இப் பொருள்களைக் கண்டு பிடித்துள்ளார். திருடப்பட்ட இப் பொருள்கள் தற்சமயம் கிராமசேவையாளரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

இத் திருட்டு தொடர்பாக பொலீஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டிருப்பதாகவும்—

திருடப்பட்ட பொருள்களைஉரியவர்களிடம் திருப்பி ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சமய நந்திகளில்

நெடுந்தீவு மத்தி புனித அன்னை வேளாங்கண்ணி மாதா கோயிலின் விசேட திருப்பலி ஆராதனைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை நெடுந்தீவு பங்குத்தந்தை அருட்திரு. மொன்வேட் அடிகளாரினால் ஒப்புக்கொடுக்கப்படும். (ஐ-111)

★ ★ ★

கொக்குவில் மாத்தனை கந்தசுவாமி கோயில் வைரவர் பொங்கல் இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணி முதல் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

சாவகச்சேரி வடக்கு இலஞ்சி ஆரணியம் குமர கோட்டம் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம் கடந்த வியாழனன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தேர்த்திருவிழா எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறும். (ஐ-31)

★ ★ ★

கொக்குவில் மேற்கு சித்தி விநாயகர்(ஐயனார்) கோயில் வருடாந்த மஹோற்சவம் கடந்த 10 ஆம் திகதி ஆரம்பமானது. எதிர்வரும் 18 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (ஐ)

## எண் கணித...

(நான்காம் பக்க தொடர்ச்சி)

விடயங்களையும் அறிந்திருப்பது சிறந்ததாகும்.

### கணிதத்தின் அடிப்படை விடயங்கள்

மாணவர்கள் வினாக்களைத் தெரிவு செய்து விடை அளிக்கும் போது அவர்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகள் கணிதத்தின் அடிப்படை விடயங்களே ஆகும். ஒவ்வொரு வினாவிலும் அதன் அடிப்படை எண்ணக் கரு (Basic Concept) தெரிந்திருக்க வேண்டும். அத்துடன் அதனைச் செய்வதற்கு தேவையான அடிப்படை அம்சங்களைத் தெளிவாகப் புரிந்திருக்க வேண்டும். உதாரணமாக மடக்கையின்றிச் சுருக்குக என்ற பகுதியை எடுத்தால் அதில் மடக்கை பற்றிய விதி எண்ணக் கருத்தாக அமைகின்றன. அத்துடன் பெருக்கல், வகுத்தல் அடிப்படை அம்சங்களாகின்றன. இவையிரண்டையும் நன்கு அறிந்து கொள்வதன் மூலம் இவ்வினாவைச் செய்து முடிக்க முடியும்.

அதே போன்று அடிப்படை அம்சங்களான திசை கொண்ட எண்களின்கூட்டல், கழித்தல், பெருக்கல் அல்லது வகுத்தல், தசமதானங்களை பெருக்கல் பிரித்தல், அடைப்புக்குறி நீக்கம், பிரதியீடு, சமன்பாடுகளைத் தீர்க்கும் முறைகள் என்பவை போன்றவற்றை மாணவர் நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டும்.

எனவே, மாணவர்கள் தமக்கு என்ன அலகு சுலபமாகத் தெரிகிறதோ அதனை நன்கு கற்று, வினாக்களை இப்பொழுதே திடப்படுத்தி விடையளிக்க வேண்டும். மேலே சொல்லப்பட்ட முறைகளையும் அவதானித்துக் கூடிய முயற்சி செய்தால் பாடத்தில் சித்தி அடையலாம்.

பரீட்சை நெருங்கும் வேளைகளில் கற்கலாமென்ற சிந்தனை பல மாணவர்களின் பரீட்சை முடிவுகளில் ஏமாற்றத்தையே கொடுத்திருப்பதைக் காணமுடிந்தது.ஆகையால் மாணவர்கள் இப்போதிருந்தே தமது முயற்சியைப் பெருக்கினால் எண்கணித பாடத்தில் சித்தியடைய முடியும். ★

# மனித நேயம் பெற்று வாழ்வதற்கு ஆண்டவர் சந்தர்ப்பம் தருகின்றார்

மனித சூழலிலிருந்து சமயத்தைப் புறம்பார்க்க முடியாது சமயம் என்பது மனிதனுடைய இயற்கையோடு பின்னிப் பிணைந்த ஒன்று; அது மனிதனுடைய வாழ்வு என்றே சொல்லலாம். இயேசுவும் மனித சூழலிலிருந்து அப்பாற்பட்ட வாழ்வு வாழவில்லை; போலி வேடங்களை அணிந்து வாழவில்லை, அவரது வாழ்வு முழுவதிலும் இறைத் தன்மையை வெளிப்படுத்தி, தந்தையின் ஆசையை தமது சொல்லில், செயலில் வெளிப்படுத்தினார். அன்பிற்கும், உறவுக்கும், அரவணைப்பிற்கும் அடித்தளமாக விளங்கினார். சிந்தனையில் தெளிவாக இருந்தார். செய்யும் கருமத்தில் களங்கமில்லாமல் வாழ்க்கை நடத்தினார். உலகத்தை அழிக்கவல்ல, மண்ணுலகில் இறைவனின் இராச்சியத்தை ஆக்கவல்ல ஆற்றல் நிறைந்தவர்களாக மக்கள் வாழ வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டார். கடவுளின் மக்கள் யார் என்று வாழ்ந்து காட்டினார்.

கடவுளாட்சி என்றால் என்னவென்று சொல்லியும், வாழ்ந்தும் காட்டியவர் அவர் அந்த வாழ்வின் ஒரு பகுதியே இன்று எமக்கு இறைவார்த்தை வாயிலாக தரப்படுகின்றது. அவரது இறைவார்த்தையை கேட்டவர் மலைத்துப்போய் ''இதெல்லாம் இவருக்கு எங்கிருந்து வந்தது''.... இவருக்கு இவையெல்லாம் எப்படி கிடைத்தது? இவருக்கு என்ன தகுதி இருக்கின்றது? இவரா எமக்குச் சொல்லுவது என்று பல கேள்விகள் கேட்டனர். காரணம், இயேசு யார் என்பதை உலக கண்ணோட்டத்தில் மட்டும் அறிந்திருந்தமையே.

இவர் தச்சன் அல்லரோ? மரியாளின் மகன் தானே. சூசை, யூதா இவரின் சகோதரர்கள் தானே..., என்று பல கேள்விகளைக் கேட்டார்கள்.

இவ்விடயத்தில் என்னையும் எனது செயற்பாடுகளையும் நிறுத்தி சிந்தனை செய்யக் கடவுள் காலம் என்னும் பச்சைக்கொடியைக்காட்டிய வண்ணம் நிற்கின்றார்.

இன்னும் காலம் போகவில்லை; சந்தர்ப்பங்கள் குறையவில்லை; வாழ்க்கையை வாழத் தொடங்கு; இன்னும் காலம் கடந்துவிடவில்லை. நில், கவனி, யோசனை செய், மெதுவாக நட. துயரம் வந்தால் ஆண்டவன் மீது பாரத்தைப்போடு.

கோடானு கோடி மக்களுக்கு நடுவிலே, இல்லை கோடானு கோடிகுணங்களுக்கும் நடுவிலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்

இனம், குலம், சமூக நிலை, கல்வி, பணபலம், திறமை என்னும் சமூக வேலிகளை தகர்த்தெறிந்துவிட்டு மனித நேயம் என்னும் பரந்த குணம் பெற்று வாழ இன்னும் ஆண்டவர் சந்தர்ப்பம் தந்து கொண்டே இருக்கின்றார்.

குடிக்கின்ற தண்ணீரும், ஓடுகின்ற இரத்தமும் எந்த வேறுபாடும் காட்டிக் கொள்வதில்லை. நாம் அனைவரும் ஒரே மக்கள், ஆண்டவன் வாழும் இல்லமாக வாழ, அன்பியல் சமூகத்தைக் கட்டியெழுப்ப, அயலவர்களில் ஆண்டவனைக் காண்போம். மற்றவர்களைப் பற்றி நாம் சொல்வதையும், செயல்களை விமர்சிப்பதிலும் உண்மைத் தன்மையை அறிந்து செயலாற்றுவோமாக.

'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்று இதயக் கடினத்தோடு குறுகிய உள்ளத்தோடு வாழாமல் —

பொய்மையிலிருந்து மெய்மைக்கும்.

சாவிலிருந்து வாழ்விற்கும்

இருளினின்றும் ஒளிக்கும்

இட்டுச் செல்லும் உயர் இலட்சியமாக எமது வாழ்வு அமைய வேண்டும்.

மனிதன் தனது வாழ்வில் திருத்தியமைக்கக் கூடியதைத் திருத்தியமைக்க, அவனால் திருத்தி அமைக்க முடியாத ஒரு நிலையை இறைவனின் அருள் திருத்தி அமைக்கும். ஏனெனில் இறையருள் இயற்கையை அழிப்பதல்ல; அதை மேம்படுத்துவதாகும்.

—அருட்திரு. சாள்ஸ் கொலின்

## ஞாயிறு நற்பிரசாதம்

## நாளை

ஆனி 30

திங்கட்கிழமை

திதி: நவமி

பிற்பகல் 2.09 வரை.

நட்சத்திரம்: சுவாதி

முன்இரவு 10.00 வரை.

சுபநேரம்: 12.00-1.30

ராகுகாலம்: 7.30-9.00

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஆறு மாதங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

யிலான கலந்துரையாடலின் போது தெரிவிக்கப்பட்டது.

கடந்த சில நாள்களாக யாழ்ப்பாணத்தில் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, விலை உயர்வு குறித்து நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் வர்த்தகர் சங்கத்துடன் கலந்துரையாடியது.

இந்த கலந்துரையாடலின் பின்னர் நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் விடுத்த செய்திக் குறிப்பில் ஆறு மாதத்துக்குத் தேவையான பொருள்கள் கையிருப்பில் இருப்பதாக வர்த்தகர் சங்கம் தெரிவித்திருப்பதாகவும்—

ஆகவே தேவையற்ற வகையில் பதற்றம் அடையாது வழமைபோல் பாவனைப் பொருள்களைக் கொள்வனவு செய்யும்படியும்—

தேவைக்கு அதிகமான பொருள்களை அவசரப்பட்டு கொள்வனவு செய்து செயற்கைத் தட்டுப்பாடும் முறையற்ற வர்த்தகமும் ஏற்பட உதவ வேண்டாம் என்றும்—தெரிவித்துள்ளது. (இ)

## இருவர்...

(முதலாம் பக்கத் தொடர்)

பட்டனர்.

திருகோணமலை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்ற அடையாள அணிவகுப்பின் போது இந்த இருவரும் அடையாளம் காணப்பட்டனர். கோணேஸ்வரன் அல்லது பாபு மற்றும் எஸ். லிங்கன் ஆகிய இருவருமே அடையாளம் காணப்பட்டவர்கள் ஆவர்.

இவர்களில் லிங்கன் திருகோணமலைத் துறைமுக அதிகார சபையில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றியவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-ஐ-5-150)

## பொருள்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

அவர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ். குடாநாட்டில் தற்போது எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசி அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் —

தேவையான பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் — சில வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்குக் காரணம் வடக்குக்குப் பொருள்களை ஏற்றி வந்த கப்பல் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டமையும், கப்பல் தீயிட்டுக் கொளுத்தப்பட்டமையுமே காரணம் என்றும் தெரிவித்துள்ளனர்.

இந்தச் செய்தி முற்றிலும் தவறானது என்றும், யாழ். பகுதியில் எவ்விதப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு கிடையாது எனவும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

புலிகளால் கப்பல் கடத்தப்பட்டதையும், அழிக்கப்பட்டதையும் காரணம் காட்டி பொது மக்களைக் கஷ்டப்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் கடை உரிமையாளர்களை கேட்டுக் கொள்கின்றேன்.

இது போன்ற அசம்பாவித காரணங்களைக் காட்டி பொது மக்களைக் கஷ்டப் படுத்துபவர்கள் சந்தர்ப்பவாதிகள் என்றும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## மோதலை அடுத்து...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த மோதல் சம்பவத்தை அடுத்து நேற்று அப்பகுதி சுற்றிவளைக்கப்பட்டது.

சுன்னாகம், கந்தரோடை, மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய், சீரணி ஊடாக சங்குவேலி, உடுவில், மருதனார்மடம் பகுதிகளை உள்ளடக்கியே சுற்றிவளைப்பு இடம் பெற்றது.

அதேசமயம் சுன்னாகம், கந்தரோடை, சங்குவேலிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்தின் போது உயிரிழந்ததாக சுமார் 35 வயது மதிக்கத்தக்க இனந்தெரியாத ஒருவரின் சடலம் நேற்று சுன்னாகம் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

சடலத்தின் வலது பக்கம் காதுக்குக் கீழும், முகத்திலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

சடலம் இனம் காணும் பொருட்டும், பிரேத பரிசோதனையின் நிமித்தமும் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-15)

வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற் செய்தி!
மீண்டும் யாழ். நகரில் தமது
சேவையை ஆரம்பித்திருக்கிறது

★ நதுலா ★
நகை மாடம்

இல. 241 G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★ உங்கள் நகைத் தேவைக்கு இன்றே நாடுங்கள்

(36748)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13-07-1997இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# அராலியில் 100 குடும்பங்களுக்கு நீரடைப்பு மலசல கூடங்கள்

### அகதிசளுக்கான ஐ நா. தூதரகம் உதவி

வலிகாமம் மேற்குப் பிரதேசத்திலுள்ள மிகவும் பின்தங்கிய அராலி மேற்கு, அராலி மத்தி கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் சுகாதாரத்தைப் பேணும் நோக்குடன் தெரிவு செய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் ஒவ்வொன்றும் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான நீரடைப்பு மலசல கூடங்களை அமைத்துக் கொடுக்கும் வேலைகளை ஆரம்பித்துள்ளது.

தெரிவு செய்யப்பட்ட குடும்பங்கள் தங்களின் பங்களிப்பாக மலகூடக்குழிகளை வெட்டிவருகின்றன.

மலசலகூடம் அமைப்பதற்குத் தேவையான பொருள்களும் அமைப்புக் கூலிகளும் குறிக்கப்பட்ட மதிப்பீட்டில் அடங்கும்.

அத்துடன் அராலிக்கிராமத்தைச் சேர்ந்த மீளக்குடியமர்ந்துள்ள தெரிவு செய்யப்பட்ட 131 மீனவர் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 3 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகளை ஆயிரத்து 500 ரூபாவை மானியமாகவும்—

ஆயிரத்து 500 ரூபாவை தொழில் செய்து மாதாந்தம் 100 ரூபா என்ற அடிப்படையிலும் மீளளிப்புச் செய்தல் வேண்டும் என்ற அடிப்படையில் மேற்படி நிறுவனம் வழங்கவுள்ளது.

இத்திட்டத்துக்குத் தேவையான வலைகளைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையை, வலிகாமம் மேற்கு பிரதேச செயலக திட்டமிடல் பிரிவு மேற்கொண்டுள்ளது.

மீளளிப்பு செய்யப்படும் பணம் மீண்டும் இப்பிரதேசத்திலுள்ள ஏனைய மீனவக் குடும்பங்களுக்கு இந்த அடிப்படையில் மீன்பிடி வலைகளை விநியோகிப்பதற்குப் பயன்படுத்தப்படவுள்ளது.

### கூட்டுறவு பயிற்சி நெறி

யாழ். மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் பணியாளருக்கான கூட்டுறவுப் பயிற்சி நெறி எதிர் வரும் ஓகஸ்ட் மாதம் ஆரம்பமாகவுள்ளது. எட்டாம் வகுப்பு சித்தி அடைந்து தொடர்ந்து மூன்று வருடகாலம் கூட்டுறவுச் சேவையில் கடமையாற்றி வரும் பணியாளர்கள் இப் பயிற்சிக்கு விண்ணப்பிக்க முடியுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

### இளங்கோ அடிகள் விழா

யாழ்ப்பாணம், ஜூலை 13

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தமிழ் மன்றம் நடத்தும் இளங்கோ அடிகள் விழா நாளை திங்கட்கிழமை காலை 11 மணிக்கு ஓட்லி மண்டபத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் பட்டி மண்டபம், வில்லுப்பாட்டு, சொற்பொழிவுகள் என்பன இடம் பெறும். (இ-4)

## தங்கத்துரை...

(முதலாம் பக்கத் தொடர்)

பதிக்கு நேற்று 'பக்ஸ்' செய்தி ஒன்று அனுப்பப்பட்டது.

கடந்த காலங்களில் இது போன்ற பல அரசியல் கொலைகள் இடம்பெற்றுள்ளன. துரதிர்ஷ்டவசமான சூழ்நிலைகள் காரணமாக அக் கொலைகள் தொடர்பாக சரியான விதத்தில் திருப்திகரமான விசாரணைகள் இடம்பெறவில்லை.

தங்கத்துரை எம். பியின் கொலைச்சம்பவம் தொடர்பாக தற்போது இடம்பெற்று வரும் விசாரணைகளுக்கும் இதே கதி ஏற்படலாம் என நாம் அஞ்சுகின்றோம். எனவே இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக் குழு ஒன்றின் மூலம் சுதந்திரமான நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இப்படி கூட்டணியின் திருமலைக் கிளை ஜனாதிபதியைக் கேட்டிருக்கிறது.

### புனருத்தாரண அபிவிருத்தி:

# கொலம்பிய பேராசிரியர் இன்று கலந்துரையாடல்

பிரிட்டிஷ் கொலம்பிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி பசில் வொன்கோரன் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பிய பல்கலைக்கழகத்திற்கும் யாழ். பல்கலைக்கழகத்திற்கும் இடையேயான ''சிடா'' (C. I. D. A) உதவி இணைப்புத் திட்டம் தொடர்பாக ஆராய்வதற்காக இங்கு வந்துள்ள கலாநிதி பசில், யாழ்ப்பாணப் புனருத்தாரண அபிவித்தி சம்பந்தமாக கலந்துரையாட விரும்புகிறார்.

யாழ். பல்கலைக்கழக மண்டபத்தில் இன்று பி. ப. 2 மணிக்கு நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் பல்கலைக்கழக மூதவை உறுப்பினர்கள் மற்றும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் யாவரையும் தவறாது பங்குபற்றுமாறு துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அழைத்துள்ளார். (அ)

### அதிபர்கள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 13

பாடசாலை தொகை மதிப்புத் தொடர்பாக கோப்பாய்க் கோட்ட அதிபர்களுக்கான கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஐ)

## கப்பல்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

அரசாங்கத்தின் எதுவித தலையீடும் இல்லாத — தனியார் வர்த்தகர்களால் கூலிக்கு அமர்த்தப்பட்ட — 5 கப்பல்கள் உள்ளன. இவற்றில் ஒன்று தான் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்ட 'மொறாங் பொங்' என்ற கப்பலாகும். இக் கப்பல்கள் அனைத்தும் வடபகுதிக்கான சேவையைத் தற்போது நிறுத்தியுள்ளன.

இவற்றைவிட அத்தியாவசிய சேவைகள் நாயகத்தினால் யாழ். அரச அதிபருக்கு அனுப்பப்படும் பொருள்களைக் கொண்டு செல்ல நான்கு கப்பல்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டன. இந்தக் கப்பல்களும் தற்போது பொருள்களைக் கொண்டு செல்லவில்லை.

தராகி, நரேமா, என்டியூரன்ஸ் ஆகிய 3 கப்பல்கள் பயணிகளைக் கொண்டு செல்லப் பயன்படுத்தப்பட்டன; அவையும் தற்போது சேவையில் ஈடுபடவில்லை.

இவற்றைவிட குமண, ஹொந்தல, கோமாரி ஆகிய மூன்று கப்பல்கள் ஆயுதப் படைகளுக்குத் தேவையான பொருள்களை எடுத்துச் செல்லும் பணியில் ஈடுபட்டுள்ளன.

பாதுகாப்பு வழங்கப்படாவிடின் பொருள்களை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்ல முடியாது என கப்பல் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது கிடைத்துள்ள கடற்படைத் தகவல்களின்படி 'டொனாக்குழி' என்ற கப்பல் யாழ்ப்பாணத்துக்குத் தேவையான பொருள்களை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறை சென்றுள்ளது. கொண்டு சென்ற பொருள்களை இறக்குவதா என்பது குறித்து முடிவெடுக்கும் வரை தற்காலிகமாக அக் கப்பல் நங்கூரமிட்டு தரித்து நிற்கிறது.

கொழும்பில் ஐந்து சரக்குக் கப்பல்கள் பொருள்களை வடபகுதிக்குக் கொண்டு செல்ல தயார் நிலையில் நிற்கின்றன.

யாழ்ப்பாணம் செல்ல மன்னாரில் 8 ஆயிரம் பேரும் திருகோணமலையில் 4 ஆயிரம் பேரும் காத்து நிற்பதாக கடற்படைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்று வடகொரிய கப்பலின் மாலுமிகள் விடுவிக்கப்பட்டுள்ளதால் நிலைமைகளில் மாற்றம் ஏற்படக் கூடும். இருப்பினும் கடற்படை பாதுகாப்பு வழங்காவிடின் வடபகுதிக்கான கப்பல் சேவையை நடத்த முடியாது என கப்பல் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

ஆனால் பாதுகாப்பை வழங்க தங்களிடம் போதிய வசதிகள் இல்லை எனக் கடற்படை தெரிவிக்கிறது.

கேள்வி: தற்போது உருவாகியுள்ள சூழ்நிலையில் வடபகுதி மக்களுக்கான உணவு விநியோகத்தைப் போலவே வடபகுதியிலுள்ள படையினருக்குமான விநியோகம் தடைப்படக் கூடும் அல்லவா?

பதில்: ஆம். உண்மையில் நிலைமை அதுதான். இருப்பினும் பாதுகாப்புப் படைகளுக்குத் தேவையான பொருள்களை ஏற்றிவரும் கப்பல்கள் அணியாக வருகின்றன. அவற்றிற்கு கட்டாயமாக கடற்படையினர் பாதுகாப்பை வழங்குகின்றனர். இப்பணி தொடர்ந்து நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

ஆனால் வடபகுதி மக்களுக்குத் தேவையான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றி வரும் கப்பல்களினதும் பயணிகள் கப்பல்களினதும் சேவை பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக அத்தியாவசிய சேவைகள் நாயகத்தினால் யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பப்படும் சீனி, அரிசி போன்ற பொருள்களை ஏற்றிச் செல்லும் நான்கு கப்பல்களும் தற்போது சேவையில் ஈடுபடவில்லை. அதுபோல தனியார் வர்த்தகர்களுக்கு பொருள்களை ஏற்றிச் செல்லும் ஐந்து கப்பல்களும் சேவையில் ஈடுபடவில்லை.

கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமாயின் அதைக் கடற்படையினரால் மாத்திரம் வழங்க முடியும். ஆனால் கடற்படையினர் கடற்பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவதாலும் அவர்களிடமுள்ள வளங்கள் போதுமானதாக இல்லாதபடியாலும் அவர்கள் பாதுகாப்பு வழங்க முடியாத நிலையில் உள்ளனர். எனவே பாதுகாப்பு வழங்க வழியில்லை. (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org